வசித்த பகுதிகளில் சிங்களர்களை இலங்கை அரசு குடியமர்த்தி வருகிறது. தமிழர் வழிபாட்டுத் தலங்கள் அகற்றப்படுகின்றன. மொத்தத்தில் ஓர் இனவெறி இலங்கையில் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் தட்டிக் கேட்க வேண்டிய மத்திய அரசு, தமிழர்களின் உணர்வுகளுக்கு, தமிழக அரசின் கோரிக்கைகளுக்கு சற்றும் மதிப்பளிக்காமல் பாராமுகமாக இருந்து வருவது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.

## 3. அரசினர் தனித் தீர்மானம்

### இலங்கையை 'நட்பு நாடு' என்று கருதாமல், தமிழினப் படுகொலையை போர்க் குற்றமாகக் கருதி, குற்றம் புரிந்தவர்களுக்கு உரிய தண்டனை கிடைக்கவும், பொருளாதாரத் தடை விதித்திடவும், 'தனி ஈழம்' குறித்து பொது வாக்கெடுப்பு நடத்திடவும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தைக் கொண்டு வர மத்திய அரசை வலியுறுத்துதல்

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** இந்தச் சூழ்நிலையில், ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வுகளை மத்திய அரசுக்கு மீண்டும் எடுத்துரைக்கும் வகையில் கீழ்க்காணும் தீர்மானத்தினை தமிழக அரசின் சார்பில் நான் முன்மொழிகிறேன்:

**தீர்மானம்**

"தமிழன் யாருக்கும் தாழாமல் – யாரையும் தாழ்த்தாமல், எவரையும் சுரண்டாமல் – எவராலும் சுரண்டப்படாமல், எவருக்கும் எசமானனாக இல்லாமல் – உலகில் எவருக்கும் அடிமையாக இல்லாமல் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே எங்களது தலையாய கொள்கை" என்றார் பேறிஞர் அண்ணா. (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிக்கேற்ப, இலங்கைவாழ் தமிழர்களுக்கு நல்வாழ்வு ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதைத் கருத்திற்கொண்டு, இலங்கை நாட்டை 'நட்பு நாடு' என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும்; (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கை இனப் போரின்போது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன் விசாரணை நடத்திடவும்; (மேசையைத் தட்டும் ஒலி) இந்த சர்வதேச

2013 மார்ச் 27] [செல்வி ஜெ ஜெயலலிதா]

விசாரணையின் அடிப்படையில், போர்க் குற்றம் நிகழ்த்தியவர்கள் சர்வதேச நீதிமன்றம் முன்பு நிறுத்தப்பட்டு அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தந்திடவும்; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்கள் மீதான அடக்குமுறையை இலங்கை அரசு நிறுத்தும் வரை இலங்கை நாட்டின்மீது பொருளாதாரத் தடையை விதித்திடவும்; (மேசையைத் தட்டும் ஒலி) ஈழத் தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு 'தனி ஈழம்' குறித்து இலங்கைவாழ் தமிழர்களிடமும், இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்திடவும், (மேசையைத் தட்டும் ஒலி) ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தினைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்; தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது." (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தினை இந்த மாமன்றம் ஒரு மனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கைத் தமிழர்களின்பால் எனது தலைமையிலான தமிழக அரசு எடுத்து வரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டும், நமது கோரிக்கைகள் வென்றெடுக்கப்படும் நாள் விரைவில் மலர இருக்கிறது என்பதை மனதில் வைத்தும், (மேசையைத் தட்டும் ஒலி) போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாகிய மாணவ, மாணவியர் தங்களுடைய அறப்போராட்டத்தைக் கைவிட்டு, கல்வியில் தொடர்ந்து கவனம் செலுத்தி, பெற்றோருக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) எனது இந்த வேண்டுகோளுக்கு அனைத்து கட்சிகளைச் சார்ந்தவர்களும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

பிற்பகல் 12–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இப்பொழுது மணி 12–30 ஆகிவிட்டது. இன்னும் 11 பேர் பேச வேண்டும். (குறுக்கீடு) நன்றி சொல்கிறீர்களா? (குறுக்கீடு) கருத்து எல்லாம் இல்லை. தீர்மானம் நிறைவேற்றியதற்குப் பின்னர் கருத்துகள் இல்லை, உட்காருங்கள்.*

## 4. வரவு–செலவுத் திட்டம், 2013–2014, பொது விவாதம்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2013–2014 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் நிதியாண்டிற்கான தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையின்மீது எனது கருத்துக்களைப் பதிவு செய்திட நல்ல வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிற தங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல நிதிநிலை அறிக்கை ஏழை மக்களுக்கு ஏற்றம் தரக்கூடியதாகவும், அடித்தளத்து மக்களுக்கு ஆதரவு தரக்கூடியதாகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உதவிடக்கூடியதாகவும், அனைத்துத் தர மக்களுக்கும் சம வாய்ப்பை உருவாக்கித் தருவதாகவும், அப்படிப்பட்ட ஓர் அரணாக இருக்கக்கூடியதாகவும் அமைந்திட வேண்டும் என்பது நிதிநிலை அறிக்கைக்கான இலக்கணமாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சீரிய இலக்கணத்தோடு நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திற்கு நிதிநிலை அறிக்கையைத்*